**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 125/2010</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி** 05.02.2026

**பெயர்** **கணேசன்**

**த/பெ** **சிதம்பரம்**

**சாட்சி** **DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.15.**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

9. முந்தைய குறுக்கு விசாரணையில் என் தந்தை ரியல்எஸ்டேட் தரகராக இருந்தார் என்று குறிப்பிட்டுள்ள போது அதனை காண்பிக்கும் வகையில் அடையாள அட்டை அல்லது பதிவு செய்யப்பட்ட அட்டை எதுவும் உள்ளதா என்றால் இல்லை. ரியல்எஸ்டேடிலிருந்து வருமானம் வந்ததாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது.

நான் வாங்கியதாக பதிலுரையில் குறிப்பிட்டுள்ள சொத்து அ அட்டவணை சொத்தா அல்லது பி அட்டவணை சொத்தா என்றால் தெரியாது. அ – அட்டவணை ஐட்டம் – 1, 2 வின் சர்வே எண்கள் 14/1, 56 மற்றும் 57.

10. மேற்சொன்ன சொத்தினை நான் வாங்கினேனா என்றால் இல்லை. என் தாத்தாவின் சொத்துக்கள். என் தாத்தாவின் சொத்து 1985–ல் பாகப்பிரிவினை மூலம் என் தந்தைக்கு கிடைக்கப்பெற்ற சொத்து. பாக்கம் மற்றும் பரிக்கப்பட்டில் அமைந்துள்ள சொத்துக்களை என் தந்தை வாங்கினார். நான் எந்த சொத்தும் வாங்கவில்லை என்றால் சரிதான். என் பதிலுரையில் நான் தனிப்பட்ட முறையில் சொத்தினை வாங்கியதாக குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

11. என் தந்தை வாங்கியதாக கூறும் சொத்துக்கள் பிராதின் அட்டவணை சொத்துக்களில் எந்த சொத்து என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண் தெரியாது. எவ்வளவு பணத்திற்கு யாரிடம் இருந்து சொத்தினை வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தில் என் தந்தை வாங்கியதாக கூறும் இடங்கள் எந்த வருடம் வாங்கியது என்றால் பாக்கத்தில் உள்ள சொத்து 1990 வாங்கப்பட்டது. 1993 ல் அது விற்கப்பட்டது. 1993 ல் பரிக்கப்பட்டில் சொத்தினை வாங்கினார். 1990 ல் பாக்கத்தில் என் தந்தை சொத்தை வாங்கியபோது எந்த வருமானத்தை கொண்டு வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால்

தெரியும்.

12. என் தந்தைக்கு பாகத்தின் மூலமாக வந்த சொத்துக்களில் இருந்து கோபரசநல்லூரில் விவசாயம் செய்ததிலிருந்து வந்த வருமானத்தை கொண்டும் மற்றும் தனிப்பட்ட முறையில் 5 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து வந்த வருமானத்தை கொண்டும் மேற்சொன்ன பாக்கம் நிலத்தை வாங்கினார். யாருடைய இடத்தை குத்தகைக்கு எடுத்திருந்தார் என்றால் லோகநாதன் என்பவருக்கு சொந்தமான காட்டுப்பாக்கம் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளார். குத்தக்கை எடுத்ததற்கான ஏதேனும் ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் நம்பிக்கையின் பெயரில் ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தவில்லை.

13. மேற்சொன்ன சங்கதியை எனது பதிலுரையிலோ அல்லது எனது பிரமாணவாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1990–ல் பாக்கம் நிலத்தை என் தந்தை வாங்கியதற்கு ஏதேனும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். தற்போது லோகநாதன் உயிருடன் இல்லை. அவர் தரப்பில் சாட்சிகளை நீதிமன்றத்திற்கு அழைக்க இயலுமா என்றாமல் இயலாது. பி.சா.ஆ 1 ஆவணத்தில் என் தந்தைக்கு அவரின் தகப்பனார் மூலமாக கிடைத்த பாகத்தை தர்ஷினி என்பவரின் பெயருக்கு எழுதி கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான்.

14. பி.சா.ஆ –1 ன் 3–ம் பத்தியில் எனக்கு பூரனமாக கிடைக்கபெற்ற

சொத்து என்று கிடைக்கப்பெற்ற சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ–2 ஆவணத்திலும் மேலே சொன்ன அதே வாசகம் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு ஆவணங்களும் என் மகள்களின் பெயருக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு ஆவணங்களும் எழுதும் சமயத்தில் 1–ம் பிரதிவாதி எங்கள் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் யார், யார் இருந்தோம் என்றால் நான் , என் தாயார், என் தந்தை, 3–ம் பிரதிவாதியான என் இளைய சகோதரி இருந்தோம்.

15. என் தந்தை சரிதா என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சரிதாவிற்கு எழுதி கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது. அது எந்த சொத்தினை அந்த செட்டில்மெண்ட் மூலம் எழுதி கொடுத்தார் என்றால் கோபரநல்லூாரில் சர்வே எண் 14/1–ல் 5500 சதுர அடி நிலத்தை மேற்சொன்ன செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் என் தந்தை எழுதி வைத்தார். அதுபோல் என் பெயருக்கும் பி.சா.ஆ 3 மூலம் என் தந்தை செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். சரிதாவிற்கும் எனக்கும் மேற்சொன்ன செட்டில்மெண்ட் மூலம் வந்த சொத்துக்கள் என் தந்தைக்க 1985–ல் பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் சரிதான்.

16. பி.சா.ஆ 1 மற்றும் பி.சா.ஆ 2 உயில் ஆவணங்கள் 2008 ல் என் தந்தையால் எழுதப்பட்ட உயில் ஆவணம் என்றால் சரிதான். உயில் எழுதப்பட்ட பிறகு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தபோது 1–ம் பிரதிவாதி பதிலுரையை தாக்கல் செய்தார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. என் பதிலுரையிலும் நான் உயில் குறித்து எந்த தகவலும் குறிப்பிடவில்லை என்றால் ஞாபகம் இல்லை. இரண்டு உயிலுமே என் தந்தை எங்களுடன் இருந்த சமயத்தில் அதனை சாதகமாக பயன்படுத்தி என் மகள்களின் பெயரில் என் தந்தையை ஏமாற்றி வாங்கிய உயில் என்றால் சரியல்ல, என் தந்தை சுயநினைவுடன் இருந்தபோது தான் அது நிறைவேற்றப்பட்டது. அந்த உயிலை பதிவு செய்யும் போது பதிவு அலுவலகத்திற்குள் யார் சென்றோம் என்றால் நானும், என் தாயார், என் தந்தை மற்றும் என்னுடைய இளைய சகோதரி ஆகியோர் சென்றோம்.

17. அந்த உயில் எங்கு எழுதப்பட்டது என்றால் குன்றத்தூரில் உள்ள உமா எண்டர்பிரைசஸ் என்று பத்திரம் எழுதப்படும் ஒரு நிறுவனத்தில் எழுதப்பட்டது. நிறுவனமா அல்லது கடையா என்றால் கடை. மேற்சொன்ன உயிலில் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் என் மச்சானான மகேஷ்கண்ணன் மற்றும் என் தாயார். மகேஷ்கண்ணன் தற்போது உயிருடன் இல்லை. மேற்சொன்ன உயில் தொடர்பாக என் தாயார் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்க இயலுமா என்றால்

இயலும். தற்போது என் மூத்த மகளான லாவன்யாவிற்கு வயது 23. இளைய மகளான தர்ஷினிக்கு வயது 21.

18. என் தந்தை 2014 ல் இறந்தார். தேதி நினைவில் இல்லை. அதன்பிறகு உயிலின் அடிப்படையில் அதனை probate செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த உயிலை வைத்து என் மகள்கள் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் இளைய மகளின் பிறந்த தேதி என்ன என்றால் தெரியாது. 21 வயது முடிந்துவிட்டது. வாதிக்கு அவர்களின் பாகம் சென்றடையக் கூடாது என்ற தீய எண்ணத்தோடு என் தந்தையை ஏமாற்றி வாங்கிய உயில் என்றால் சரியல்ல. 1990–ற்கு முன்பு எங்களின் வருமானத்தை காட்டும் வகையில் ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை விவசாயத்தின் மூலம் வந்த வருமானம்.

19. என் தந்தை எ–அட்டணை சொத்தில் விவசாயம் செய்து அதில் வந்த வருமானத்தை கொண்டு தான் பி–அட்டவணை சொத்தை வாங்கினார் என்றால் எ–அட்டவணை சொத்தில் 1 ஏக்கர் 28 செண்ட் நிலம் என்பதால் அதனை மட்டும் வைத்து பி அட்டவணை சொத்து வாங்கியிருக்க முடியாது அதனால் 5 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து அதிலிருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் பி அட்டவணை சொத்து வாங்கப்பட்டது. எ–அட்டவணை சொத்து 1 ஏக்கர் 28 செண்ட் இல்லை

என்றும் அதற்கும் அதிகாமாக உள்ளது என்றும் நான் மேலே சொன்ன அளவு சரியல்ல என்றால் மேற்சொன்ன 1 ஏக்கர் 28 செண்டில் மட்டும் தான் என் தந்தை பயிர் செய்து வந்தார் மீதமுள்ள அ–அட்டவணையில் உள்ள சொத்துக்களை என் சித்தப்பாவிற்கு விற்றுவிட்டார்கள்.

20. என் சித்தப்பாவிற்கு விற்றுவிட்டதாக நான் எங்கும் குறிப்பிடவில்லை என்றும் அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ – அட்டவணை ஐட்டம்–2ல் உள்ள காட்டுப்பாக்கத்தில் உள்ள வீட்டில் தற்போது யார் குடியிருக்கிறார்கள் என்றால் நானும், என் தாயாரும் குடியிருக்கிறோம். வாதிக்கு திருமணம் ஆவதற்கு முன்பாகவும் அதே வீட்டில் தான் இருந்தோமா என்றால் ஆம். அ –அட்டவணை 3ம் ஐட்டம் சொத்தினை யார் பயிர் செய்து வந்தார்கள் என்றால் சொத்து அமைந்துள்ள இடத்தில் உள்ள நபர்களே குத்தகைக்கு பயிர் செய்துவந்தார்கள். ஐட்டம் 3 மற்றும் 4ல் உள்ள சொத்துக்களில் என்படி என் சித்தப்பாவிற்கு விற்றுவிட்டு அந்த குத்தகை பணத்தை என் சித்தப்பாக்கள் தான் வாங்கினார்கள்.

21. என் சித்தப்பாக்களோடு தற்போது நல்ல பேச்சுவார்த்தையா என்றால் இல்லை. ஐட்டம் 3 மற்றும் 4ல் அமைந்துள்ள சொத்துக்கள் 1985ல் 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்று அதற்கான ஆவணங்களும் அவர் பெயரில்

தான் உள்ளது, நான் வழக்கிற்காக என் சித்தப்பா பெயரில் உள்ளதா பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. ஐட்டம் 3 மற்றும் 4 அமைந்துள்ள சொத்துக்களை என் தந்தை விற்றுவிட்டார். யாருக்கு விற்பனை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அவருடைய பாகத்திற்கு மட்டும் ரூ. 20,000/- கிரையத்தொகை பெற்றார். மேற்சொன்ன ரூ. 20,000/- பணம் மற்றும் குத்தகை செய்த வருமானத்தை கொண்டு தான் பாக்கம் கிராமத்தில் நிலத்தை வாங்கினாரா என்றால் சரியல்ல ரூ. 20000 பணத்தை எங்கள் குடும்ப செலவிற்கு பயன்படுத்தினார். அப்போது எங்கள் குடும்பத்தில் பணம் நெருக்கடியான சூழ்நிலை.

22. அவ்வாறு பணம் நெருக்கடியான சூழ்நிலையில் 1990-ல் பாக்கம் நிலத்தை எவ்வாறு வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. என் தந்தை நிலத்தை ரூ. 20,000-க்கு வாங்கியது தெரியும். பாக்கம் நிலத்தை வாங்கும் போது நாங்கள் குத்தகை செய்து வந்தோம். 1990-ல் எனக்கு என்ன வயது என்றால் 1976-ல் நான் பிறந்தேன். 1990-ல் எனக்கு 14 வயது. சொத்து விற்றது, வாங்கிய விவரம் இளவராக இருந்த காணரத்தினால் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல நான் அவருடன் மேற்சொன்ன பரிவர்த்தனைகளில் உடன் இருந்து வந்தேன். நான் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அவருடன் இருந்ததாக நான் பொய்யுரைக்கிறேன் என்றும் அப்போது நான் 10-ம் வகுப்பு படித்து வந்தேன் என்றால் சரியல்ல, என்

தந்தையுடன், நான் 5–ம் வகுப்பிலிருந்தே விவசாயம் செய்து தான் வந்தேன்.

23. அ அட்டவணை சொத்து ஐட்டம் –1ல் கோபரசநல்லூரில் உள்ள சொத்திலிருந்து தற்போது வருமானம் வருகிறது என்றால் சரிதான். ரூ. 2,00,000/– மாதம் வருகிறது. ரூ. 2,00,000/ மொத்த வருமானத்தையும் நான் தான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல என் தாயார் பயன்படுத்தி வருகிறார். ஒரு சில வருடங்கள் வருமானம் இல்லாமலும் போகும். ரூ. 2,00,000/– வருமானம் பாதித்தொகை ரொக்கமாகவும் மீதித்தொகை என் தாயாரின் வங்கி கணக்கிலும் வருகிறது. மேற்சொன்ன சங்கதியை என் பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

24. மேற்சொன்ன கோபரசநல்லூர் சொத்திலிருந்து ரூ.7,00,000/– மேலாக வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. பெரியபணம்சேரியில் உள்ள சொத்தினை விற்பனை செய்த போது அதில் யார் கையொப்பம் இட்டார் என்றால் என் தந்தைதான் கையொப்பம் இட்டார். மேற்சொன்ன சொத்தினை என் தந்தை விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். எந்த வருடம் விற்பனை செய்தோம் என்றால் தெரியாது. அப்போது வாதிக்கு திருமணம் ஆகிவில்லை. விற்பனை செய்த சமயத்தில் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 13 வயது. திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை.

25. விற்பனை செய்த சொத்தில் இருந்து தான் பாக்கம் கிராமத்தில் உள்ள சொத்தினை பெற்று அதில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் பி-அட்டவணை சொத்தை வாங்கினோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் உள்ள போது சரிதாவின் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டு 6-ம் பிரதிவாதி பெயருக்கு என் தந்தை உயில் எழுதி வைத்தார் என்றால் அது என் தந்தையின் விருப்பம். இந்த வழக்கு நிலுவையில் உள்ள போது சரிதாவின் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டு 6-ம் பிரதிவாதி பெயருக்கு என் தந்தை உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும் என் பிரமாணவாக்குமூலத்திலும் அதை குறிப்பிட்டுள்ளேன் ஆனால் இவ்வழக்கிற்காக தெரியாது என்று பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல, என் தந்தையின் விருப்பம் அவரின் விருப்பத்தின்படி அவர் யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்கலாம்.

26. 6-ம் பிரதிவாதியின் பெயருக்கு எழுதி வைத்த உயிலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். அப்படி இருக்கும்பட்சத்தில் அந்த உயில் பத்திரம் என்னிடம் தான் உள்ளதா என்றால் என் தாயாரிடம் உள்ளது. என் தாயார் என்னுடன் என் வீட்டில் தான் வசித்துவருகிறார். என் தாயாருக்கு வயது 65 அவரை நான் தான் பார்த்து கொண்டு வருகிறேன். நல்ல உடல்நிலையில் தான் இருக்கிறார்.

உயில் தொடர்பாக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு அழைத்து வர இயலுமா என்றால் இயலும். பி–அட்டவணை சொத்தை 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான். 2007 – 2008 வருடத்தில் விற்பனை செய்தேன் சரியான தேதி நினைவில் இல்லை. அந்த விற்பனை பத்திரத்தில் நானும் என் தந்தையும் சேர்ந்து தான் கையொப்பம் போட்டோம்.

27. நாங்கள் விற்பனை செய்த விவரம் வாதிக்கு அப்போது தெரியாது என்றால் சரியல்ல. வாதியிடம் அந்த ஆவணத்தில் கையொப்பம் வாங்கினோமா என்றால் வாங்கவில்லை. விற்பனை செய்த பிறகு எங்களிடம் வந்து வாதி சொத்து குறித்து கேட்டாரா என்றால் விற்பனை செய்வதற்கு முன்பாகவே என் தந்தையிடம் மொத்த சொத்தையும் கேட்டார் அதன் பிறகு என் தந்தை அவர்களின் பங்கையும் வாதிக்கு கொடுக்க முடியாது என்று விற்பனை செய்துவிட்டார். வாதி சொத்துக்களை கோருகிறார் என்ற காரணத்தினால் வாதிக்கு அவரின் பங்கு சென்றடையக் கூடாது என்று நானும் என் தந்தையும் சேர்ந்து வில்லங்கம் ஏற்படுத்திவிட்டோம் என்றால் சரியல்ல வாதிக்கு அவரின் பங்கான 2 ½ ஏக்கர்ஸ் நிலத்தை பரிக்கப்பட்டில் என் தந்தை ஏற்கனவே வாங்கி கொடுத்துவிட்டார்.

28. பரிக்கப்பட்டில் வாங்கிய நிலம் எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால்

1993–ல் வாங்கப்பட்டது. யாரிடமிருந்து வாங்கினார் என்ற விவரம் ஞாபகம் இல்லை. வாதி பெயரில் வாங்கியதாக சொல்லும் விவரத்தை என் பதிலுரையிலோ அல்லது பிரமாணவாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிக்கு அவரின் பாகம் சென்றடையக் கூடாது என்று மேற்சொன்ன சங்கதியை வழக்கிற்காக இந்த சமயத்தில் பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பரிக்கப்பட்டில் வாங்கிய நிலமானது வாதியின் திருமணத்திற்கு முன்பா அல்லது அதன் பின்பா என்றால் திருமணத்திற்கு பின்பு.

30. திருமணத்திற்கு பின்பு வாதி மற்றும் வாதியின் கணவர் அவர்களின் சுய வருமானத்தை வைத்து வாங்கிய சொத்து தான் பரிக்கப்பட்டில் உள்ள சொத்து என்றால் சரியல்ல, வாதியும் அவரின் கணவரும் வேலைக்கு எதுவும் செல்லாத காரணத்தினால் நான் தான் மேற்சொன்ன நிலத்தை அவர்களுக்கு வாங்கி கொடுத்து பிறகு அவர்கள் விவசாயம் செய்து வந்தார்கள். மேற்சொன்ன சொத்தின் சர்வே எண் போன்ற விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன சொத்திற்கான பத்திரங்கள் அனைத்தும் வாதியிடம் தான் உள்ளது. மேற்படி சொத்தினை உண்மையிலேயே வாங்கி கொடுத்திருந்தால் அதன் விவரங்கள் எனக்கு

தெரிந்து இருக்கும் எனவே நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

31. வாதியை என் தாய்மாமாவிற்கே திருமணம் செய்து கொடுத்த காரணத்தினால் உறவினர்களின் திருமண செலவு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு அ–அட்டவணை சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் பி–அட்டவணை சொத்து வாங்கப்பட்ட காரணத்தினால் பி–அட்டவனை சொத்தும் கூட்டுக்குடும்ப சொத்தாக தான் கருதப்படும் என்றால் சரியல்ல. கூட்டுக்குடும்ப சொத்து என்று கருதும்பட்சத்தில் என் தந்தையின் வாரிசான வாதிக்கும் அதில் சம உரிமை உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்ற காரணத்தினால் வாதியை சேர்க்காமல் ஏற்படுத்திய ஆவணங்கள் எதுவும் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்த போது ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் அ–அட்டவணை சொத்திலிருந்து வந்த இடைக்கால வருமானத்தை (mesne profits) வாதிக்கு சென்றடைய வேண்டும் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 03.53 பி.எம்.**